RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22261

# முப்பூசை வழிபாட்டு மரபுகள்

இரா. இரவிச்சந்திரன் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Traditions of Mupoosai (Sacrificial) Worship

R. Ravichandran [a, *]

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: kalairavi1974@gmail.com

Received: 27.09.2022
Revised: 01-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The adage is that one should not live in a town where there is no temple. But it is not only that there are no places today that do not have a temple; there are temples even in uninhabited towns. The human mind is like a weak vine. It cannot stand upright. Therefore, it has become a tradition since then for a man to climb on the back of the worship of God. Those who have died in the family or clan, those who have been killed, spirits, elders, virgins, etc., as well as trees, stones, weapons, etc., are worshipped as deities. The Devendra Kula Vellalar community lives in Alathudayanpatti village in the Thuraiyur taluk of Tiruchirappalli district. The place is situated on the way from Thuraiyur to Puliyancholai. People of all communities live in this village. The place is rich in natural fields, two irrigation tanks, and temples of worship. The purpose of the article is to highlight that in the Muniyappan Temple, one of the temples of such worship, the Mupoosai (Worship by offering black hens, goats, and pigs) worship is traditionally celebrated once in five years.

**Keywords:** Worship, Devendra Kula Vellalar, Alathudayanpatti Village, Tradition

## முன்னுரை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம் ஆலத்துடையான்பட்டி என்ற கிராமத்தில் "தேவேந்திரகுல வேளாளர்" இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். துறையூரிலிருந்து புளியஞ்சோலைக்குச் செல்லும் வழியில் இவ்வூர் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் அனைத்து இன மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூரில் இயற்கை வளமிக்க வயல்களும், பாசனத்திற்குரிய இரண்டு ஏரிகளும் வழிபாட்டுக் கோவில்களும் மிகுதியாக உள்ளன. அத்தகைய வழிபாட்டுக் கோவில்களில் ஒன்றான முனியப்பன் கோவிலில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை முப்பூசை வழிபாடு மரபு வழியாகக் கொண்டாடப்பட்டு வருவதை எடுத்துக் கூறுவதே கட்டுரையின் நோக்கமாகும்.

## முப்பூசை வழிபடும் மக்கள்

ஆலத்துடையான்பட்டியில் வசித்து வருகின்ற தேவேந்திரகுல வேளாள மக்களுள் பூசாரி வட்டத்தைச் சார்ந்தவர்கள் இம்முப்பூசைத் திருவிழா கொண்டாடி வருகின்றனர். இந்நிகழ்வில் ஆடு, கோழி, பன்றி இம்மூன்றையும் பலியிடுவதால் முப்பூசைத் திருவிழா என்று அழைக்கின்றனர் (Kuppurasu Sarojini, 2001).

## கோவிலின் தோற்றம்

முனியப்பன் சாமியைக் குலதெய்வமாகக் கும்பிட்டு வரும் பூசாரி வட்டத்தைச் சார்ந்த மக்களுக்கு குலதெய்வம் சேலம் மாவட்டம், ராசிபுரம் வட்டம் அத்தனூர் என்ற கிராமத்தில் உள்ளது. இவர்கள் சேலத்திற்குச் சென்று வருவதற்குச் சிரமமாக இருப்பதாலும், முப்பூசை விழா நடத்துவதற்கு வசதியின்மை காரணமாகவும் அத்தனூர் கோவிலில் இருந்து பிடிமண் எடுத்து வந்து ஆலத்துடையான்பட்டியில் கோவில் கட்டி கும்பிட்டு வருகின்றனர். அத்தனூரில் முனியப்பன் என்பவர் வாழ்ந்தார். அவர் இறந்த பிறகு புதைத்த இடத்தில் அடையாளச் சின்னம் வைத்து வழிபட்டோம். பின்னர் அவ்விடத்தில் கோவில் கட்டி முப்பூசை விழா நடத்தினோம். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அத்தனூரிலிருந்து பிடிமண் எடுத்து வந்து ஆலத்துடையான்பட்டியில் கோவிலைக்கட்டி கும்பிட்டு வருவதோடு 65 ஆண்டு காலமாக முப்பூசை விழாவும் நடத்தி வருகிறோம் என்று தகவாளர் "பழனியப்பன்" தெரிவித்தார் (Palaniyappan, 2021, Informer, Age 71, Alathudaiyanpatti, India). முனியப்பன் கோவில் ஊருக்கு மத்தியில் ஒன்றும் வயல் வெளியில் ஒரு கோவிலும் (காடாரன் கோவில்) கட்டியுள்ளனர். "ஊர் மக்களைக் காப்பாற்றுவதற்கு ஒரு கோவிலும் அமைத்துள்ளோம்" என்று தகவலாளர் முனியாண்டி தெரிவித்தார் (Muniyandi, 2021, Informer, Age 63, Alathudaiyanpatti, India). எனவே, வீட்டிலும் காட்டிலும் எந்தவித தீங்கும் நேராத வண்ணம் முனியப்பன் காப்பார் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்து வருகிறது.

## திருவிழா நிகழ்ச்சிகள்

முனியப்பன் சாமியைக் குலதெய்வமாக வழிபட்டு வருவோர் அனைவரும் கூடி திட்டமிட்ட நாளில் இணைந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை முப்பூசைவிழா நடத்துகின்றனர். விழாவின் தொடக்கமாகச் சக்தி அழைத்தல் நடைபெறுகிறது. சக்தி அழைக்கும்போது முனியப்பன் அழகமலைக் கருப்பு, செம்பங்கோம்பங் கருப்பு, கரிவண்டராயர், உத்தண்டராயர், மதுரைவீரன், சந்தனக்கருப்பு, ராசா, பட்டவன், பட்டாயி, செல்லாயி ஆகிய சாமிகளுக்கான அடையாளங்களை வைத்துச் சக்தி அழைக்கின்றனர் (Chandrasekaran, 2003). இந்நிகழ்ச்சி ஆலத்துடையான்பட்டி ஏரிக்கரையில் மங்கையம்மன் கோவிலை அடுத்துள்ள பூஞ்சி மரத்துக் களத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் சாமி ஆடுபவரை குளிக்கச் செய்து இடுப்பில் உடுத்தியிருக்கும் கீழாடை (வேட்டி)யோடு நிற்க வைத்து சக்தி அழைக்கின்றனர். உடுக்கை அடித்து சாமிப் பாடல்களைப் பாடி சக்தி அழைப்பர். சாமி அருள் வந்து ஆடி அவரவருடைய அடையாளங்களைச் சரியாக எடுத்த பிறகு அந்தச் சாமிக்குரிய ஆடையை உடுத்தி அவருடைய கையில் அந்தச் சாமிக்குரிய அடையாளக் கருவியாகிய ஆயுதத்தையும் கொடுக்கின்றனர். பின்னர் பூஞ்சி மரத்துக் களத்திலிருந்து ஊருக்குள் உள்ள கோவிலுக்கு மேளதாளங்கள், வானவேடிக்கையோடு வருகின்றனர்.

## காவக்கொடுத்தல்

அடுத்த நாள் நிகழ்வது மாலை 5 மணிக்குப் பங்காளிகள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் வண்டி மாடு கட்டிக்கொண்டு வண்டியில் ஆடு, பன்றி, கோழி ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு வயல்வெளியில் இருக்கின்ற காடாரன் கோவிலுக்குச் செல்கின்றனர். சரியாக இரவு 11.30 மணிக்கு மேல் முனியப்பன் சாமி ஆடுபவரை அழைத்து வந்து நிறுத்தி சக்தி அழைக்கின்றனர். சாமி அருள் வந்ததும் அருள் வாக்கு சொல்கின்றனர். பிறகு காவக் கொடுப்பதற்கே பிடித்து வைத்திருந்த எட்டுமாத ஆட்டுக்கிடாய்குட்டி ஒன்றை கொண்டு வந்து கோவிலின் முன்னிறுத்தி மஞ்சள் தண்ணீர் தெளிக்கின்றனர். அந்தக்கிடாய் உதறியதும் அதன் கழுத்தை அறுத்து மண்சட்டியில் ரத்தத்தைப் பிடித்து முனியப்பனுக்குக் கொடுக்கின்றனர். அவர் ரத்தத்தைக் குடித்தவுடன் கம்பளியால் அவரைப் போத்தி கோவிலின் வலப்புறத்திலுள்ள புளியமரத்தடியில் படுக்க வைத்துவிடுகின்றனர். இவ்வாறு ரத்தத்தை முனியப்பன்சாமி ஆடுபவர் குடிப்பதனால் "குடிக்காவ" என்று அழைக்கப்படுகிறது. சாமிக்கு ரத்தத்தைப் பலியிடுவதால் மக்களை ரத்தபலி வாங்காது என்ற நம்பிக்கை உண்டு.

குடிக்காவ நிகழ்ச்சி முடிந்ததும் பங்காளிகள் அவரவர் கொண்டு வந்த ஆடு, கோழி, பன்றி இவை முறையே பலியிடுகின்றனர். ஒவ்வொர் வீட்டிலும் வந்து பெண்கள் பொங்கல் வைத்து சாமிக்கு முன்பு வைத்துப் படைக்கின்றனர். இவ்வாறான நிகழ்வு நடந்து முடிந்ததும் விடியற்காலையில் வண்டி மாடுகளைக் கட்டிக் கொண்டு பலியிட்ட ஆடு, கோழி, பன்றி இவற்றை ஏற்றிக்கொண்டு வீட்டிற்குப் புறப்படுகின்றனர். "குடிக்காவ" குடித்து படுத்து இருக்கின்ற முனியப்பன் சாமியை வீட்டிற்குச் செல்லும்போது எழுப்புகின்றனர். "இடையில் அழுப்பினால் எழுந்து எழுப்பியவரை வெறியில் கடித்துவிடுவார்" என்று தகவலாளர் "செல்வம்" தெரிவித்தார் (Selvam, 2021, Informer, Age 48, Alathudaiyanpatti, India). அனைவரும் கோவிலுக்கு வந்து தீர்த்தமும் பிரசாதமும் பெற்றுக்கொண்டு அவரவர் வீட்டிற்குச் செல்கின்றனர்.

## உதிர்வாதுடைத்தல்

விழாவின் இறுதி நிகழ்வாக "உதிர்வாதுடைத்தல்" என்ற நிகழ்ச்சி நடைபெறுகிறது. விழா துவங்கிய நாளில் இருந்து எட்டாம் நாள் நிகழ்ச்சியாக உதிர்வாதுடைத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. சாமி ஆடுபவர் கையில் சாட்டையை வைத்துக்கொண்டு மக்கள் மத்தியில் சுழற்றிக் கொண்டு வருவார். யாரேனும் பேய்ப்பிடித்தவர்கள் இருந்தால் இவருடைய கண்களுக்குத் தெரியும். உடனே அவரை இழுத்து வந்து மண்டியிட்டு அமரச் செய்து கை கூப்பச் செய்கிறார். மூன்று அடி சாட்டையால் கூப்பிய கையில் அடிக்கிறார். இவற்றின் வழி பேய்ப்பிடித்தவரைவிட்டு நீங்கிவிடும் என்று நம்புகின்றனர். விழா தொடக்கம் முதல் இறுதி நாள் நிகழ்வான உதிர்வாதுடைக்கும் நிகழ்வு வரை சாமி ஆடுபவர்கள் கோவிலிலேயே தங்கி இருப்பர். எட்டாம் நாள் நிகழ்ச்சி முடிந்த பின்பே வீட்டிற்குச் செல்கின்றனர். அதன் பிறகே அசைவ உணவை உண்பர். அதுவரை சைவ உணவே உண்ண வேண்டும்.

## முடிவுரை

பூசாரி வட்டத்தைச் சேர்ந்த தேவேந்திர குல வேளாளர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை முப்பூசை விழா கொண்டாடுவதை மரபாக வைத்துள்ளனர். ஆடிமாதம் பதினெட்டாம் நாளுக்குப் பிறகு இவ்விழா கொண்டாடப்படுகிறது. மற்ற மாதங்களில் முப்பூசை விழா நடத்தும் வழக்கம் இல்லை. 2022 ஆம் ஆண்டு ஆடிமாதத்தின் இறுதியில் காவக்குடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. முப்பூசைத் திருவிழாவில் இரண்டு நாள் அன்னதானம் (முருகன், இடும்பன்) நடைபெறுகிறது. மூன்றாம் நாள் சக்தி அழைத்தல், நான்காம் நாள் காடாரன் கோவிலுக்குச் செல்லுதல், ஐந்தாம் நாள் கிடாவெட்டு, எட்டாம் நாள் உதிர்வா துடைத்தல் என முப்பூசை விழா நடைபெற்று வருகிறது. ஆடு, கோழி, பன்றி மூன்றையும் பலியிடுதல் "முப்பூசை" என்றும் ஆட்டின் ரத்தத்தைக் குடிப்பதால் "குடிக்காவ" என்றும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவதால் "பெரும்பூசை" என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. முப்பூசைத் திருவிழா நடத்துவதன் மூலம் முனியப்பன் கோவில் பங்காளிகளைச் சார்ந்தவர்களும் மற்ற உறவினர்களும் சந்திப்பதும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதும் இயல்பாகிறது. குலதெய்வத்தை வழிபடுவதன் மூலம் எந்தவித தீங்குமின்றி வாழலாம் என்ற நம்பிக்கை இம்மக்களிடையே நிலவி வருகிறது. இத்திருவிழாவின் மூலம் மக்களின் ஒற்றுமையும் தெய்வத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் வெளிப்படுகிறது. இவ்விழாவினை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடுவதை மரபாக வைத்துள்ளனர்.

## References

Chandrasekaran, R. (2003) Naattuppura vazhipaattu Marapugalum Nambikkaigalum, Mahakavi Bharathiar Nuulagam, Coimbatore, India

Kuppurasu Sarojini, K.A. (2001) Mallar Enum Thevindira Kula Devendra Kula Vellalar Thala Pirivukalum Koota Muraikalum, Tamilar Panpadu Samguga Aivu Mandram, Coimbatore, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License